**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திரு.S.அமலநாதகமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
**உத்தமபாளையம்.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 67/2024**
(Original Suit CNR No. TNTH06-000-214-2023 )

1) V.மாடத்தி
2) V. தெய்வேந்திரன்
3) V. ஜெகன் (இறப்பு)
4) V. ரூபாஸ்ரீ
(4 ம் வாதியின் இயற்கை காப்பாளரும்,
கார்டியனுமான பெரியம்மா 1 ம் வாதி மூலம்)

:: வாதிகள்

**/எதிர்/**

1. V. முருகேஸ்வரி
2. வட்டாட்சியர் அவர்கள், உத்தமபாளையம்
3) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
தேனி. :: பிரதிவாதிகள்

**(Plaint was Amended as per the Order in IA.No.3/2024, dated. 17.10.2024.)**

------

இவ்வழக்கு 27.06.2024-ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 11.03.2026-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.க.கோபி B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், என தெரிவித்துள்ளார். 2,3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.K. போதுராஜா, B.Sc.,B.Ed.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி அவருக்கு ஆட்சேபனை இல்லை என

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:38:43 +0530

தெரிவித்துள்ளார். இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

இறந்துபோன லேட்.வனராசு அவர்களுக்கு 1 முதல் 4 வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுதாரர்கள் என விளம்புகை பரிகாரம் வழங்கக்கேட்டும், அதன் அடிப்படையில் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் (வாதிகள் அனைவரையும் குறிப்பிட்டு) வழங்க செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:</u>**

02.1) லேட்.வனராசு என்பவர் கடந்த 02.04.2022ம் தேதி சின்னமனூரில் திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியின் காரணமான இறந்துள்ளார். லேட்.வனராசுவின் தகப்பனார் லேட்.கடற்கரை என்ற சடையன் 20.07.1986ம் தேதியிலும், தாயார் லேட்.K.ராணியம்மாள் அவர்கள் 11.08.2014ம் தேதியிலும் மு.துரைச்சாமிபுரத்தில் இறந்துள்ளார்கள். 1991ம் ஆண்டு லேட்.வனராசு என்பவர் ஜாதி மற்றும் வட்டார வழக்கத்தின்படி மு.துரைச்சாமிபுரத்தில் உள்ள வீட்டில் வைத்து 1ம் வாதியான V.மாடத்தி என்பவரை திருமணம் செய்துள்ளார். மேற்படி திருமணத்தின் பலனாக லேட்.வனராசு–V.மாடத்தி தம்பதிகளுக்கு 2ம் வாதியான V.தெய்வேந்திரன் என்பவர் கடந்த 04.05.1992ம் தேதியிலும், 3ம் வாதியான லேட்.V.ஜெகன் என்பவர் 1995ம் ஆண்டிலும் பிறந்துள்ளார்கள். 3ம் வாதியான லேட்.V.ஜெகன் என்பவர் உடல்நலக்குறைவு காரணமாக கல்லீரல் பாதிக்கப்பட்டு காலமாகியுள்ளார்.

02.2) இந்நிலையில் இறந்துபோன லேட்.வனராசு மற்றும் அவரது

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:38:55 +0530

மனைவியான V.மாடத்தி ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக அவரது ஜாதி மற்றும் கிராம பஞ்சாயத்தின் மூலம் பேசி ஒருவருக்கொருவர் சுமூகமாக பிரிந்து (Unofficial Divorce) கொண்டனர். அதன்பின்னர் 1ம் வாதியும் நாளது தேதி வரை தனது மகனான 2ம் வாதியுடன் தனியாக வசித்து வந்தார். லேட்.வனராசு என்பவர் கடந்த 2006ம் ஆண்டு 1ம் பிரதிவாதியான முருகேஸ்வரி என்பவரை திருமணம் செய்து கொண்டார். லேட்.வனராசுக்கும் 1ம் பிரதிவாதியான முருகேஸ்வரிக்கும் கடந்த 07.12.2007ம் தேதி 4ம் வாதியான ரூபாஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது.

02.3) லேட்.வனராசு 02.04.2022ம் தேதி காலமாகிவிட்டதால் அவரின் இறப்பு சான்றிதழை அடிப்படையாக வைத்து உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்களிடம் 2ம் வாதியானவர் இவ்வழக்கின் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியை சேர்த்து வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தை பரிசீலனை செய்த 2ம் பிரதிவாதி லேட்.வனராசு என்பவர் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே இரண்டவாது திருமணம் செய்துள்ளார் என்றும், லேட்.வனராசுவின் இரண்டு மனைவிகளும் தற்போது உயிருடன் இருக்கிறார்கள் என்றும், எனவே மேற்படி விண்ணப்பம் தொடர்பாக 2ம் வாதியின் கோரிக்கை தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். எனவே, 1 முதல் 4 வாதிகள் தான் லேட்.வனராசுவின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரமும், 2ம் பிரதிவாதி அலுவலகம் 1 முதல் 4 வாதிகளை குறிப்பிட்டு வாரிசு சான்றிழ் வழங்க செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க உத்திரவிடக்கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>2,3 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின்</u> <u>சுருக்கம்:</u>**

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:39:07 +0530

3.1) வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் 2,3 பிரதிவாதிகளால் மறுக்கப்படுகிறது. வனராஜுக்கும், மாடத்திக்கும் திருமணம் நடைபெற்றது என்றும், அவர்களுக்கு இரண்டு மகன்கள் பிறந்தததாகவும், அதில் 3ம் வாதி இறந்துவிட்டதாகவும், வனராஜுக்கும், மாடத்திக்கும் கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டதாகவும், பின்னர் இரண்டாவதாக 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து அவர்களுக்கு ரூபாஸ்ரீ என்ற மகள் இருப்பதாகவும் கண்டுள்ள சங்கதிகளில் திருமணம் நடந்ததாக சொல்லும் வருடத்திற்க்கும், குழந்தைகள் பிறந்ததாக சொல்லும் வருடத்திற்கும் முரண்பாடு உள்ளது.

03.2) மேலும் 4ம் வாதி இறந்துவிட்ட வனராஜுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பிறந்த மகள் என்பதால் அவரும் சட்டப்படியான வாரிசாவார். 2ம் வாதி, 2ம் பிரதிவாதியிடம், 1ம் பிரதிவாதிக்கும் சேர்த்து வாரிசு சான்றிதழ் கோரியிருப்பதால், இறந்துவிட்ட வனராஜுக்கு இரண்டு மனைவிகளும் உயிருடன் இருப்பதாலும் நீதிமன்றம் உத்திரவுப்படி பிரதிவாதிகள் செயல்பட தயாராக உள்ளார்கள். எனவே, பிரதிவாதிகளைப்பொறுத்து வாதிகளின் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும் 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பு வாதுரைகள் பரிசீலனை செய்யப்பட்டு 10.10.2025–ம் தேதியன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1 | Whether the plaintiffs are entitled to the relief of declaration that all plaintiffs are legal heirs of deceased Vanaraju? |
| 2 | Whether the plaintiffs are entitled to the relief of Mandatory injunction as prayed for? |
| 3 | What other reliefs are entitled to the plaintiffs? |

**5)** வாதிகள் தரப்பில் 2–ம் வாதி V.தெய்வேந்திரன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:39:17 +0530

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், 1ம் வாதி மாடத்தி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ 10 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

7) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8) **<u>வழக்கெழுவினாக்கள் மற்றும் பிரச்சனைக்கான தீர்வு</u>**

08-01) வழக்கு எழுவினா 1 மற்றும் 2-க்கான பரிசீலனை மற்றும் தீர்வின்படி, வனராசு என்பவர் 1ம் வாதியான V.மாடத்தி என்பவரை ஜாதி மற்றும் வட்டார வழக்கின்படி மு.துரைச்சாமிபுரத்தில் உள்ள வீட்டில் வைத்து 1991ல் திருமணம் செய்துள்ளார். அந்த திருமணத்தின் பலனாக 2ம் வாதி V.தெய்வேந்திரன் மற்றும் 3ம் வாதி V.ஜெகன் பிறந்துள்ளார்கள். மேற்படி 1 மற்றும் 2ம் வாதிகளின் ஆதார் அட்டை வா.சா.ஆ 4, 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. V.ஜெகன் என்பவர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு கல்லீரல் பிரச்சனையின் காரணமாக 08.11.2020ம் தேதி காலமாகிவிட்டார். அது வாசா.ஆ 6 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 1ம் வாதிக்கும் லேட். வனராசுக்கு கருத்து வேறுபாட்டின் காரணமாக அவர்களது ஜாதி மற்றும் கிராம பஞ்சாயத்தின் மூலமாக பேசி ஒருவருக்கொருவர் சுமூகமாக பிரிந்து கொண்டனர். அதன் பின்னர் 1வாதியும் தனது மகனான 2ம் வாதியுடன் தனியாக வசித்து வந்துள்ளார்.

08-02) லேட். வனராசு தனது முதல்மனைவியை பிரிந்த பின்னர் கடந்த 2006ம் 1ம் பிரதிவாதியான முருகேஸ்வரியை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார். அதனை நிரூபிக்கும் வகையில் 1ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு 4ம் வாதியான V.ரூபாஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது. அவரது ஆதார் ஆட்டை வா.சா.ஆ.8 ஆக

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:39:35 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளது. வனராசு கடந்த 02.04.2022ம் தேதி சின்னமனூர் பொதுகழிவறை அருகில் திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியின் காரணமாக காலமாகிவிட்டார். அவரின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வனராசு அவர்களின் பெற்றோரின் இறப்பு சான்றிதழ் வாசா.ஆ.2, வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் வாதி, 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் வனராசு இறந்துவிட்டதால் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

08–03) வனராசு முதல் மனைவி சட்டப்படி விவகாரத்து செய்யாமல் இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார் என்றும், தற்போது இரண்டு மனைவிகளும் உயிருடன் இருப்பதால், 1ம் பிரதிவாதியை சேர்த்து வாரிசு சான்றிதழ் கேட்டுள்ளதால் நீதிமன்றத்தை அணுகுமாறு 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் கூறி மனு திருப்பப்பட்டது. அந்த திருப்பப்பட்ட மனு வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட பின்னர் 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி 1 முதல் 4 வாதிகள் வனராசுவின் வாரிசுகள் என்று சான்று அளிக்க எவ்வித ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், முதல் மனைவியான மாடத்திக்கும், வனராசுக்கும் இடையே நடந்த திருமணமானது சட்டப்படி விவகாரத்து பெறாதநிலையில், 2ம் மனைவியான முருகேஸ்வரி வனராசுக்கு வாரிசாக வர மாட்டார் என்று தீர்வு காண்கிறது.

08–04) மேலும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தனது எதிர்வழக்குரை மற்றும் குறுக்கு விசாரணையில் 1ம் பிரதிவாதியை தவிர்த்து, 1 முதல் 4 வாதிகள் வனராசுக்கு வாரிசுகள் இல்லை என்று குறிப்பிட்டு மறுக்கப்படவில்லை. 2ம் வாதியான தெய்வேந்திரன் வா.சா.1 ஆகவும், 1ம்வாதி மாடத்தி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:39:45 +0530

அவர்கள் மூலம் வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிட்டு மறுக்கவில்லை. அதனால் வாதிகளால் தாக்கல் செய்த சான்றாவணங்களில் எவ்வித சந்தேகமும் எழவில்லை. மேலும் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வா.சா.2 மாடத்தி வனராசுவின் மனைவி என்றும், வா.சா.1 மற்றும் 3ம், 4ம் வாதிகள் வனராசுவின் பிள்ளைகள் என்று அறிய முடிகிறது. ஆகவே 1 முதல் 4 வாதிகள் இறந்துபோன லேட்.வனராசுவின் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்தும், பிரதிவாதிகள் 1 முதல் 4 வாதிகளை குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்க செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்து தீர்வு காணப்படுகிறது.

09) **முடிவாக**,

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.<br>இறந்துபோன லேட்.வனராசு அவர்களுக்கு 1 முதல் 4 வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுதாரர்கள் என விளம்புகை பரிகாரம் வழங்கியும், |
| 2 | 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் (வாதிகள் அனைவரையும் குறிப்பிட்டு) வழங்க செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் உத்தரவிடப்படுகிறது. |
| 3 | செலவுத் தொகை பற்றிய உத்தரவில்லை. |

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 27.03.2026–ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 19:39:54 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)***

**உத்தமபாளையம்.**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

1. வா.சா.1 V.தெய்வேந்திரன் (2–ம் வாதி)
2. வா.சா.2 மாடத்தி (1ம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 10.05.2022 | லேட்.வனராசு இறப்பு சான்றிதழ் | ஜெராக்ஸ் |
| 2 | வா.சா.ஆ.2 | 26.09.2022 | லேட்.வனராசு அவர்களின் தகப்பனார் கடற்கரை என்ற சடையனின் இறப்பு சான்றிதழ் | ஜெராக்ஸ் |
| 3 | வா.சா.ஆ.3 | 23.08.2014 | லேட்.வனராசு அவர்களின் தாயார் ராணியம்மாள் இறப்பு சான்றிதழ் | ஜெராக்ஸ் |
| 4 | வா.சா.ஆ.4 | -- | 1ம் வாதியின் ஆதார் ஆட்டை | ஜெராக்ஸ் |
| 5 | வா.சா.ஆ.5 | -- | 2ம் வாதியின் ஆதார் ஆட்டை | ஜெராக்ஸ் |
| 6 | வா.சா.ஆ.6 | 01.12.2022 | 3ம் வாதியின் இறப்பு சான்றிதழ் | ஜெராக்ஸ் |
| 7. | வா.சா.ஆ.7 | -- | 1ம் பிரதிவாதியின் ஆதார் ஆட்டை | ஜெராக்ஸ் |
| 8. | வா.சா.ஆ.8 | -- | 4ம் வாதியின் ஆதார் ஆட்டை | ஜெராக்ஸ் |
| 9. | வா.சா.ஆ.9 | -- | வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் பெறுவது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் முறையிட்டு பரிகாரம்தேடிக்கொள்ளுமாறு 2ம்வாதிக்கு அறிவுறுத்திய கடிதம் | ஜெராக்ஸ் |
| 10 | வா.சா.ஆ.10 | -- | குடும்ப அட்டை | ஜெராக்ஸ் |

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை**

***மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)***
***உத்தமபாளையம்.***